1.3.1976 துக்ளக் —மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது

பழுத்தேன் எழுதுகிறேன்

# மாண்பு மிகு மாணவர்களே! மதிப்பிற்குரிய பெற்றோர்களே!

**சோ**

நமது நாட்டில் எல்லாவற்றையும் விட மிகவும் வேதனைக்குரியதாக நான் கருதுவது, நமது மாணவ சமுதாயத்தின் போக்குதான். மனத்திற்குள் என்னை நானே மிகவும் உயர்ந்தவனாகக் கருதிக் கொண்டு இப்படிக் கூறவில்லை. சர்வ சாதாரணமான ஆசாமிகளுள் ஒருவனாகிய எனக்கே நமது மாணவ சமுதாயத்தைப்பற்றி இப்படி ஒருஎண்ணம் தோன்றுகிறது என்றால், எத்தனை உயர்ந்த உள்ளங்கள் எப்படியெல்லாம் வேதனைப்படுகின்றனவோ?

மேலை நாட்டு நாகரிகத்தைக் கண்மூடித்தனமாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டு நமது இளைஞர்கள் போகும் போக்கு விபரீதமாகத்தான் இருக்கிறது. மேலை நாட்டு 'நாகரிகம்' என்று சொல்வது கூடத் தவறு. மேலை நாட்டு 'வக்கிரங்கள்' சிலவற்றையும் 'மனக்கோணல்கள்' சிலவற்றையும் நம் நாட்டு இளைஞர்கள் நாகரிகம் என்று கருதி ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

நம் நாட்டு இளைஞர்கள் மனத்தில் ''மேலை நாடுகளில் இவையெல்லாம் வெகு சகஜமாக ஏற்றுக்கொள்ளப் பட்ட பழக்க வழக்கங்களே'' என்ற நினைப்பு இருக்கலாமோ என்னவோ? அப்படியிருந்தால் அது அவர்களுடைய அறியாமையைத்தான் காட்டும். அயல்நாடுகளில் கூட பொறுப்புள்ளவர்களும், சமுதாய நலனைப் பெரிதும் விரும்புபவர்களும், நாகரிகம் என்ற பெயரில் சமீப காலத்தில் தோன்றி விட்ட வக்கிரங்களை மனதார வெறுக்கிறார்கள். வெளிப்படையாகக் கண்டிக்கிறார்கள். அவற்றை எதிர்க்கத் தங்களால் ஆனதைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

வக்கிரங்கள் என்றும் கோணல்கள் என்றும் நான் குறிப்பிடுபவை வெளிப்படையாகத் தெரியும் சில சின்னங்களே. காட்டு மிராண்டிகள் போல் நீண்ட முடி வளர்ப்பது, கண்களுக்கு அருவருப்பை உண்டாக்கும் வகையில் குடுகுடுப்பைக்கார உடைகளை அணிவது, ஆண்களும் பெண்களும் ஒரு வரையறைக்குள் நிற்காமல் கல்லூரிகளிலேயே பழகிக் கொள்வது, பெண்களும் ஆண்களைப் போல் உடைகளை அணிவது—இவையெல்லாம் சில வெளிப்படைச் சின்னங்கள். இந்த வெளிப்படைச் சின்னங்களுக்குப் பின்னால் மறைந்திருப்பவை ஆழமான மனக்கோளாறுகளோ என்று நான் அஞ்சுகிறேன்.

உடலின் உள்ளே தோன்றும் கடுமையான வியாதிகளைக் கண்டுபிடிக்க, உடலின் வெளியே தெரியும் அறிகுறிகளை டாக்டர்கள் பயன்படுத்துகிறார்கள். ஒரு மனிதனின் மனோபாவங்களைக் கண்டுபிடிக்க, அவனுடைய நடை, உடை, பாவனைகளை மனோதத்துவ நிபுணர்கள் பயன்படுத்துகிறார்கள். இன்றைய மாணவ சமுதாயத்தின் வெளிப்படை வக்கிரங்களை வைத்து அவர்களுடைய மனப்போக்குகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது தவறல்ல என்று நான் நினைக்கிறேன்.

'வெளிப்படைச் சின்னங்களை வைத்துக் கொண்டு மனிதர்களின் உள்ளங்களை அளந்து விடுவதுதான் முறை' என்று நான் ஏதோ ஒரு பெரிய தீர்ப்பு வழங்கி விட்டதாகக் கருதவில்லை. காஷாயம் தரித்தவர்கள் எல்லோரும் மனதாரத் துறவறம் பூண்டவர்கள் அல்ல. லுங்கி, முண்டா பனியன் அணிந்தவர்கள் எல்லோரும் ரௌடிகளும் அல்ல. இதையெல்லாம் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில் எனக்கு வேறு ஒரு அபிப்பிராயமும் உண்டு. சில வெளிப்படைத் தோற்றங்கள், வெளிப்படைப் பழக்க வழக்கங்கள் ஒருசில கெடுதல்களுக்காவது குறுக்கே நிற்கும். அதே போல் வேறு சில வெளிப்படைப் பழக்க வழக்கங்கள் சில கெடுதல்களுக்கு வசதியளிக்கும்.



காஷாயம் தரித்துக் கொண்ட ஒருவன் உண்மையான துறவியாக இல்லாவிட்டாலும்கூட அந்த உடையிலேயே போய் ஒரு ரிக்கார்ட் டான்ஸைப் பார்ப்பதற்குச் சற்றுவது கூச்சப்பட்டே தீருவான். அவனுடைய வெளிப்படைப் பழக்கம்அங்கே அந்தக் கெடுதலுக்குக் குறுக்கே நிற்கிறது. லுங்கி, முண்டா பனியன் இதற்கு நேர் எதிர் என்று வைத்துக் கொள்ளலாம். இதை ஒரு உதாரணமாகத் தான் சொல்கிறேன்.

இதே வகையில் பார்த்தால் இன்று நமது மாணவர்களின் வெளிப்படைச் சின்னங்களாகிய நீண்ட முடி, அலங்கோல உடைகள் போன்றவை அவர்களுக்குக் கட்டுப்பாடுகளை மீறுவதற்கு ஒரு லைசன்ஸ் வழங்குவதைப் போல் இருக்கிறது. ''இந்த வெளிப்படைத் தோற்றங்கள் இல்லாவிட்டால் மட்டும் கட்டுப்பாட்டை மீறாமல் இருந்து விடுவார்களா?'' என்று கேட்கலாம். அதுவல்ல என் வாதம். 'இந்தத் தோற்றங்கள், கட்டுப்பாடுகளை மீறுவதற்கு வசதி செய்து கொடுக்கின்றன' என்பதே என்னுடைய கருத்து. கிருதா வளர்த்த மாணவர்கள் அனைவரும் கிறுக்குப் பிடித்தவர்கள் என்று நான் கூறவில்லை. ஆனால் கிறுக்குப் பிடிக்கும் நிலையில் உள்ளவர்கள் அநேகர் கிருதா வீரர்களாகவே காட்சியளிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஹிப்பியின் ஜடா முடியும், குடுகுடுப்பையின் ஆடையும் ஒரு மாணவன் கட்டுப்பாட்டை மீற ஆரம்பிக்கிறான் என்பதற்கு அறிகுறிகள், அபாய அறிவிப்புகள். இவற்றை எடுத்த எடுப்பிலேயே பெற்றோர்கள் கண்டித்துத் திருத்தி விடுவது நல்லது என்பது என் எண்ணம்.

இவற்றையெல்லாம் நான் அடிக்கடி நினைத்துப் பார்த்தாலும் இப்போது குறிப்பிட்டு எழுதுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரி மாத 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பத்திரிகையில் ஒரு கட்டுரை படித்தேன். ''ரிச்சீ என் மகன், என் விரோதி..'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை அது. 'லைஃப்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதைச் சுருக்கி ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் கொடுத்திருக்கிறார்கள்.

நம் நாட்டு மாணவர்கள் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை அது. அழிவின் ஆரம்பம் ஹிப்பி ஜடாமுடி என்ற என் அபிப்பிராயம் அந்தக் கட்டுரையைப் படித்தவுடன் வலுப்பட்டு விட்டது. 'மேல் நாடுகளில்—குறிப்பாக அமெரிக்காவில்—பரிபூர்ணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை' என்று நம் நாட்டு மாணவர்கள் சில பழக்க வழக்கங்களைக் கருதுகிறார்கள். அது எவ்வளவு தவறான அபிப்பிராயம் என்பதை அந்தக் கட்டுரை பயங்கரமாக, நெஞ்சைப் பிளக்கும் விதத்தில் விளக்கியிருக்கிறது.

ஒரு தாய் தந்தையருக்கு அவர்களுடைய மகனோடு ஏற்பட்ட அனுபவத்தை-உண்மையான நிகழ்ச்சியை-அந்தக் கட்டுரை விவரிக்கிறது.

அந்தத் தாய் தந்தையரின் அனுபவத்தின் சாராம்சம் இதுதான்...

ஜார்ஜ் என்பவர் ஒரு சேல்ஸ்மேன் (விற்பனைப் பிரதிநிதி). அவருடைய மனைவியின் பெயர் கெரோல். தன்னுடைய உழைப்பின் மூலம் ஒரு வீட்டையும் ஜார்ஜ் வாங்கியிருந்தார். 1954-ம் ஆண்டில் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். ரிச்சர்ட் என்ற அவனது பெயர் நாளடைவில் செல்லமாக அழைக்கப்பட்டு ரிச்சீ என்று ஆகியது. மகன் ரிச்சீக்குப் பதினைந்து வயது ஆகும் வரை ஜார்ஜின் குடும்பத்தில் குழப்பம் எதுவும் இல்லை. குறிப்பிடும்படியாக இல்லாவிட்டாலும், ரிச்சீ மற்ற பிள்ளைகளைப்போல் சாதாரண அளவில் திருப்தியளிக்கக் கூடிய ஒரு மகனாகவே இருந்தான்.

அதற்கு அடுத்த ஆண்டு-அதாவது 16-வது வயதில் - அவன் கஞ்சா போன்ற ஒரு லாகிரி வஸ்துவைப் புகைக்க ஆரம்பித்திருக்கிறான் என்ற தகவல் பள்ளி நிர்வாகிகளிடமிருந்து ஜார்ஜுக்குக் கிட்டியது.

ஜார்ஜ் தன் மகன் ரிச்சீயை விசாரித்தார். அவன் ''ஓரிரு முறை தான் உபயோகித்தேன்'' என்று கூறி இனி அம்மாதிரி செய்வதில்லையென்றும் வாக்குறுதி அளித்தான்.

அதற்கும் அடுத்த ஆண்டு பள்ளியில் அவன் வாங்கும் மார்க்குகள் கிடுகிடுவெனக் குறைந்தன. ராக் மியூஸிக் (என் மொழியில் இதை வர்ணிக்க வேண்டுமானால் 'வெறித்தனமான மேல் நாட்டு சங்கீதம்' என்று தான் சொல்ல வேண்டும்) என்ற வகைப்பாடல்களிலும், அதைப் பாடும் நட்சத்திரங்கள் மீதும் அவனுக்கு மோகம் பிறந்தது. அவர்களுடைய படங்கள் அவனுடைய அறையை அலங்கரித்தன. ஒருநாள் ஜார்ஜின் மனைவி கெரோல், ரிச்சீயின் அறையில் கஞ்சா போன்ற லாகிரி வஸ்து நிரப்பப்பட்ட பை ஒன்று இருப்பதைக் கண்டாள். ரிச்சீ அது தன்னுடையது தான் என்று ஒப்புக் கொண்டான். அது போதாதென்று ''மற்ற சில பையன்களும் இதைப் புகை பிடிக்கிறார்களே! அதுவும் தவிர பெண்களிடம் தைரியமாகப் பேசுவதற்கு இது எனக்கு உதவியாக இருக்கிறது'' என்று கூறுமளவிற்கு அவன் துளிர்த்து விட்டிருந்தான்.

மேலும் ஒரு ஆண்டு கழிந்தது. இரவில் நேரம் கழித்து வர ஆரம்பித்தான் ரிச்சீ. எதற்கெடுத்தாலும் பெற்றோர்களுடன் சண்டையிட ஆரம்பித்தான். பள்ளிக்கூட பிரின்ஸிபாலிடமிருந்து அவனைப் பற்றிய புகார்கள் வர ஆரம்பித்தன.

கஞ்சா போன்ற லாகிரி வஸ்துவைப் புகைப்பதை ரிச்சீ விட்டு விட்டான். அதற்குப் பதிலாக அதைவிட மிகக் கடுமையான லாகிரி வஸ்துக்களை உபயோகிக்க ஆரம்பித்தான்! தான், அதை நிறுத்த வேண்டும் என்று மனது வைத்தால் எப்போது வேண்டுமானாலும் தன்னால் நிறுத்திவிட முடியும் என்று பன்றை சாற்றிக் கொண்டே மேலும் மேலும் அந்தப் பழக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

ஜார்ஜின் மனவேதனை அதிகரித்தது. 'என்ன தவறு செய்தோம்? மகனை ஒழுங்காக வளர்க்கவே

தொடர்ச்சி 37-ம் பக்கம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

# மாண்புமிகு மாணவர்களே! மதிப்பிற்குரிய பெற்றோர்களே!

இல்லையா?' என்ற கேள்வியைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டார். மனைவியைக் கேட்டார். பித்துப் பிடித்தவர் போல் ஆனார்.

மகன் ஒருவிதமான குறிக்கோளுமில்லாமல் வாழ்க்கையை நடத்துவதும், அர்த்தமில்லாத பாட்டுக்களை ரசிப்பதும், தன்னுடைய இளமையான முகத்தில் மீசை—தாடியை வளர்ப்பதும், பயங்கரமான கிருதாக்களை வைப்பதும், வைக்கோல் பிரி மாதிரி தலை முடி வளர்ப்பதும், லாகிரி வஸ்துக்களும்—இவை எல்லாமாகச் சேர்ந்து மகனுக்கும் தந்தைக்கும் இடையே பிளவை ஏற்படுத்தின. பேச்சு வார்த்தை குறைந்தது. மகன்—பெற்றோர் இவர்களிடையே ஒருவருக்கொருவர் கோபமாகக் கடும் சொற்கள்!

இதற்கு அடுத்த நிலையில் 'மகனை வீட்டிலேயே வைத்துப் பூட்டி விட்டால் என்ன?' என்று ஜார்ஜுக்குத் தோன்றியது. மது அருந்துவதற்கு அனுமதி கொடுத்தால் லாகிரி வஸ்துவை நிறுத்துவதாகக் கூறும் அளவிற்கு மகன் ரிச்சீ உயர்ந்து விட்டான். ''எந்தத் தந்தையாலும் தன்னுடைய பதினேழு வயது மகன் மது அருந்துவதை அனுமதிக்க முடியாது'' என்று கத்தினார் ஜார்ஜ். (அமெரிக்காவில் இளைஞர்கள் மது அருந்துவதைப் பெற்றோர்கள் கூடக் கண்டிக்க மாட்டார்கள் என்ற, 'நாகரிகமான' எண்ணம் நமது நாட்டு இளைஞர்கள் யாருக்காவது இருந்தால் அவர்கள் இதைக் கவனித்து வைத்துக் கொள்வார்களாக).

கட்டுரை மேலும் நிகழ்ச்சிகளை வர்ணிக்கிறது. மகனின் சீரழிவை நிகழ்ச்சி மேல் நிகழ்ச்சியாக அடுக்கிக் காட்டி, அவனுடைய தாழ்வைப் படிப்படியாக இறக்கிக் காட்டுகிறது. கடைசியில் அந்த மகன் தன்னுடைய தந்தையையும் தாயையும் கத்தி எடுத்துக் கொண்டு மிரட்டும் நிலைக்குப் போய் விட்டான்.

கத்தியும் கையுமாகத் தன்னையும் தன் மனைவியையும் கொல்லத் துணிந்து நிற்கும் மகனைக் கண்டு ஜார்ஜ் ஸ்தம்பித்து நின்றார். அவர் கையில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டார்.

அவர் மனத்தில் எண்ண அலைகள் எழும்பிக் குதித்தன... தான் பெற்ற மகன்—ஆனால் தான் விரும்பியபடி வளர்ந்த மகன் அல்ல. தனக்கோ, குடும்பத்திற்கோ, சமுதாயத்திற்கோ—ஏன் அவனுக்கே கூட—எந்தவிதமான பயனும் இல்லாமல் வாழ்வதைத் தவிர் வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்து விட்ட மகன். அவன் மனத்தில் கொலை செய்யும் நோக்கம். கையில் அதற்கான கருவி. சில கணங்கள் யோசித்த ஜார்ஜ், தன் கைத்துப்பாக்கியால் மகனைச் சுட்டு வீழ்த்தினார். அவன் இறந்தான்.

கோர்ட்டில் வழக்கு நடந்தது. தற்காப்புக்காக ஜார்ஜ் செய்த காரியம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர் விடுதலையானார்.

இந்தச் சோகக் கதையில் இன்னொரு சிறிய விவரமும் மனத்தைத் தொடுகிறது. மகனைச் சுட்டு வீழ்த்திய பிறகு அவனது சவ அடக்கத்தைச் செய்வதற்கு முன்பாக ஜார்ஜ் அவன் தலையை சீராகக் கிராப் செய்தார். முகத்தை ஷேவ் செய்து சுத்தமாக்கினார். பிறகே உடலைப் புதைத்தார். அப்போதும் கூட ரிச்சீயின் லாகிரி வஸ்து நண்பர்கள் அவனை விடவில்லை. ''எப்படி ரிச்சீயின் உடலை நீங்கள் இந்த மாதிரி மாற்றலாம்? அவன் இறந்த பிறகு அவன் தலைக்கு நீங்கள் கிராப் செய்ததும், அவன் முகத்திற்கு ஷேவ் செய்ததும் தவறு'' என்றும் ஆட்சேபித்திருக்கிறார்கள். ஜார்ஜ் அவர்களை உதறித் தள்ளினார். ''என் மகன் முகத்தை இந்த வகையில்தான் நான் நினைவில் வைத்துக் கொள்ள விரும்புகிறேன்'' என்று கூறி விரட்டினார் அவர்களை.

இதுதான் அந்தக் கட்டுரையின் சாராம்சம்.

மேல்நாடுகளிலும் கூட, பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் இம்மாதிரி முறைகளில் வாழ்வது பிடிக்கவில்லை என்பதை அந்தக் கட்டுரையைப் படித்தால் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இளைஞர்கள் சிலரின் வெளிப்படைப் பழக்க வழக்கங்கள் அவர்களுடைய மனக் கோளாறுகளுக்கு அறிகுறிகளாக இருக்கலாம் என்ற என் கருத்துக்கும் அந்தக் கட்டுரை வலுவூட்டுகிறது. அதைப் படித்த எனக்கு ரிச்சீயின் பெற்றோர்கள் மீதும் ஒரு தவறு இருப்பதாகத் தோன்றியது.

ஆரம்ப அறிகுறிகள் தெரியும் போதே அவர்கள் அவனை வன்மையாகக் கண்டிக்கத் தவறியிருக்கிறார்கள். இதுதான் அவர்களுடைய தவறு என்று நான் நினைக்கிறேன்.

நம் நாட்டிலும் கூட இளைஞர்கள் விஷயத்தில் பெற்றோர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. 'விகாரமான மனப்போக்கிற்கு அறிகுறிகளே அசிங்கமான வெளித்தோற்றமும், பழக்க வழக்கங்களும்' என்பதைத் தீர்மானமாகவே நினைத்துக் கொண்டு விடுவோம். ஒரு சில சமயங்களில் இது தவறான எண்ணமாக இருக்கலாம். ஆனால் இந்த ஒரு தீர்மானத்தை மனத்தில் தோற்றுவித்துக் கொண்டு உஷாராக இருப்பது எந்தவிதத்திலும் கெடுதலாக முடிந்து விடாதே?

மாணவர்களுக்கு ஒரு வார்த்தை:

மேல் நாட்டிலும் கூட பெற்றோர்கள் தங்கள் மகன் எப்படி இருக்க வேண்டும் 'என்று விரும்புகிறார்கள் என்பதற்கு ஜார்ஜ் தன் மகனுடைய சவத்திற்குச் செய்த சிகை அலங்காரம், மனத்தை உலுக்கும் நிகழ்ச்சி.

தன் மகன் வாழ்ந்தபோது அவன் அகத்தைச் சுத்தப்படுத்த முடியாத ஜார்ஜ், மகன் இறந்த பிறகு அவன் புறத்தைச் சுத்தப்படுத்தி ஓரளவு நிம்மதி அடைந்திருக்கிறார். நமது இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்—அவர்களுடைய பெற்றோர்களுக்கும் இதே கதி தானா? இளைஞர்களிடம் தோன்றும் விகார வெளித்தோற்றங்கள், பெற்றோரின் அடிவயிற்றில் மூட்டப்படும் நெருப்பு. இளைஞர்களின் மனத்தில் ஏற்படும் கோளாறுகள், அவர்களுடைய பெற்றோர்களின் மனக்கோட்டையின் சர்வ நாசம். நாட்டின் எதிர்காலத்துக்குச் சம்மட்டி அடி. இவற்றை இன்றைய மாணவர்கள் ஒப்புக் கொள்கிறார்களோ இல்லையோ, சிந்தித்தாவது பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொட்டைத் தலையனான நான், நீண்ட முடி பற்றிப்பொறாமைப் பட்டு எழுதிய கட்டுரை இது என்று ஒதுக்கி விடும் உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. 'இவன் என்ன பெரிய சீர்திருத்தவாதியா?' என்று கேட்டு என் அபிப்பிராயங்களை உதறித் தள்ளும் உரிமையும் எல்லோருக்கும் இருக்கிறது.

ஆனால் மொட்டைத் தலையாக இருந்தும் கூட, வேண்டாத சுவர்கள் மீது மோதிப் பார்த்து அவற்றை இடிக்க முயற்சிப்பது என் வழக்கமாகி விட்டது.

(ரீடர்ஸ் டைஜஸ்டில் வந்திருக்கும் கட்டுரையை, உரிய முறையில் அனுமதி பெற்று, ஏராளமான பிரதிகள் அச்சடித்து, எல்லாக் கல்லூரிகளிலும் விநியோகம் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்தால் கூட நல்லது என்று தோன்றுகிறது. வெறும் அபிப்பிராயங்களை விட, இம்மாதிரி உண்மை நிகழ்ச்சிகள் இளைஞர்களுக்கு நல்ல எச்சரிக்கைகளாக இருக்கும். இம்மாதிரி நிகழ்ச்சிகளை இளைஞர்களின் பார்வைக்குக் கொண்டு வருவது பெற்றோர்களின் கடமை, அரசின் கடமை, சமூகத்தின் கடமை). ●

SPACE DONATED BY SASTRA UNIVERSITY, THANJAVUR – 613 401